# விவாக ரத்து அவசியம்தானா?

வல்லிக்கண்ணன் எழுதியது

விலை 3 அணா.

பதிப்பாளர் :

எம். சூரி
14-ஏ. குப்பையர் தெரு,
சென்னை-1.

**உலகளாவிய பொதுக் கள உரிமம் ( CC0 1.0 )**

இது சட்ட ஏற்புடைய உரிமத்தின் சுருக்கம் மட்டுமே. முழு உரையை https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode என்ற முகவரியில் காணலாம்.

**பதிப்புரிமை அற்றது**

இந்த ஆக்கத்துடன் தொடர்புடையவர்கள், உலகளாவிய பொதுப் பயன்பாட்டுக்கு என பதிப்புரிமைச் சட்டத்துக்கு உட்பட்டு, தங்கள் அனைத்துப் பதிப்புரிமைகளையும் விடுவித்துள்ளனர்.

நீங்கள் இவ்வாக்கத்தைப் படியெடுக்கலாம்; மேம்படுத்தலாம்; பகிரலாம்; வேறு கலை வடிவமாக மாற்றலாம்; வணிகப் பயன்களும் அடையலாம். இவற்றுக்கு நீங்கள் ஒப்புதல் ஏதும் கோரத் தேவையில்லை.

***

இது, உலகத் தமிழ் விக்கியூடகச் சமூகமும் ( https://ta.wikisource.org ), தமிழ் இணையக் கல்விக் கழகமும் ( http://tamilvu.org ) இணைந்த கூட்டுமுயற்சியில், பதிவேற்றிய நூல்களில் ஒன்று. இக்கூட்டுமுயற்சியைப் பற்றி, https://ta.wikisource.org/s/4kx என்ற முகவரியில் விரிவாகக் காணலாம்.

**Universal (CC0 1.0) Public Domain Dedication**

This is a human-readable summary of the legal code found at https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode

**No Copyright**

The person who associated a work with this deed has **dedicated** the work to the public domain by waiving all of his or her rights to the work worldwide under copyright law, including all related and neighboring rights, to the extent allowed by law.

You can copy, modify, distribute and perform the work, even for commercial purposes, all without asking permission.

***

This book is uploaded as part of the collaboration between Global Tamil Wikimedia Community ( https://ta.wikisource.org ) and Tamil Virtual Academy ( http://tamilvu.org ). More details about this collaboration can be found at https://ta.wikisource.org/s/4kx.


விவாகரத்து
தேவைதானா?

கலையகம் வெளியீடு—7
முதற்பதிப்பு—மார்ச், 1950.

# வாழ்வுப் பிரச்னை

வாழ்க்கையில் அடிபடும் பல பிரச்னைகளையும் ஆராய்ந்து, யோசனை கூறும் சிறு புத்தகங்கள் எழுதித் தரும்படி கேட்டார் எனது அருமை நண்பர் எம். சூரி அவர்கள். இவ்விதம் சிறு நூல்கள் வெளியிட வேண்டும் என்ற எண்ணம் எனக்கும் உண்டு. எங்கள் எண்ணத்தின் மலர்ச்சி தான் இந்தப் புதிய வரிசை. வாழ்வின் பல்வேறு பிரச்னைகளைப் பற்றியும் சிந்தித்து நான் அவ்வப்போது குறிப்புகள் எழுதி வைத்ததுண்டு. உலக இலக்கியங்கள், அறிஞர்களது ஆராய்ச்சி நூல்கள் முதலிய சிந்தனைச் சுரங்கங்களையும் ஆராய்ந்து உண்மைகளை உணர உழைக்கும் வேளையிலேயே, நான் கண்ட கருத்துக்களை மனோதத்துவ ரீதியாகவும் சிந்தனை ரீதியாகவும் தொகுத்துக் கொடுக்க வேண்டியது அவசியம் என்று நினைக்கிறேன். அம் முயற்சியின் விளைவு தான் இம் முதல் புத்தகம். இந்த வரிசையிலே இன்னும் பல புத்தகங்கள் வர வேண்டும். அவற்றை நீங்கள் ரசித்து மகிழ்வீர்கள் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு. வணக்கம்.

வல்லிக்கண்ணன்.

முத்துக்குமரன் அச்சகம், சென்னை-1 20.1-50.

# விவாக ரத்து அவசியம் தானா?

'பெண்மையை அறியத் துடிக்கும் இளம் உள்ளத்திற்கு அவள் வருகை பருவ மழை போலிருந்தது. மனைவி என்றால் ஒரு புதுமை. அவளைத் திருப்தி செய்ய வேண்டும். இதுவே என் ஆவல். மனம் சதா அவள் நினைவிலேயே லயித்துக் கிடந்தது. புதுமலரைச் சுற்றி ஆடும் தேனீ போல.

அவள் வாய் திறந்து ஏதேனும் கேட்டுவிட்டால், அது பிரிய தேவதையின் வாக்காக ஒலித்தது. அப்படிக் கேட்க மாட்டாளா என்பது தானே என் ஆசை! அந்த மோகம் சில மாதங்களில் மறைந்துவிட்டது. அவள் புதுமை' என்பது போய் பழகிய ஜந்துவாகி விட்டாளே. அதனால் அவளிடம் குறை காணத் தொடங்கியது மனம், போகப் போக அலுப்படையவும் ஆரம்பித்தது.

அவளது உள்ளம் மாறவில்லை. வெளித் தோற்றம் மாறியது. அது அவள் குற்றம் இல்லை. இந்த உண்மை எனக்குக் கசப்பாகத் தான் இருந்தது. அவளது அழகு மங்கினாலும், அன்பு மறையவில்லை. ஆனால், என் உள்ள நிறைவிலே கள்ளம் புகுந்து விட்டது. அதனால் தான் அவள் குறைகளே பிரமாதமாகப் பட்டன.

மனித மனம் அன்றாடச் சுழல்களில் சிக்கி அலுத்த பின் புதுமைக்காக ஏங்குகிறது. உடன் ஒட்டிய எல்லாவற்றிலும் வெறுப்பு பிறப்பது இயல்பு. பழகப் பழகப் பாலும் புளித்து விடுகிறது.'

இது 'பழகிய பால்' எனும் கதையொன்றிலே வருகிறது. கல்யாணமாகிச் சில வருஷங்கள் கழிந்ததும் கணவன் அடையும் மன நிலையைக் கூறுகிறது.

உண்மையாகவே, பழக்கத்தினால் பால் புளித்து விடுகிறதா? அதிகப் பழக்கம் அலுப்புத் தருகிறது. பால் புளிக்கும் என்று மனம் முணுமுணுக்கிறது. அது மனதின் குறைதான்.

மனம் செய்யும் லீலைகளினால் கணவன் மட்டும் பாதிக்கப் படுவதில்லை. மனைவியை கணவன் வெறுப்பது போல, மனைவியும் கணவனிடம் கசப்பும் அலுப்பும் அடைவது சகஜம். அவனது குறைகளே அதிகமாக உறுத்துகின்றன மனதை. அவனே வேண்டாதவனாகி விடுகிறான்.

மனைவியிடம் அலுப்புற்ற கணவனுக்கும் வேண்டாத மனைவியின் செயல் ஒவ்வொன்றும் பெருங் குற்றமாகத் தான் தோன்றுகிறது. எரிந்து விழுகிறான். 'மோறையைப் பாரு. மூஞ்சியைப் பாரு! உன்னையும் கல்யாணம் செய்து கொண்டேனே!' என்று ஏசுவது அதிகமாகிறது.

கணவனிடம் வெறுப்புறும் மனைவி என்ன செய்கிறாள்? தானே மனம் புழுங்குகிறாள். புலம்புகிறாள். 'போயும் போயும் என்னை இப்படி இங்கே கொண்டு வந்து தள்ளினார்களே. இவ்விதம் கல்யாணம் செய்து கொடுத்ததை விட குளத்திலே கிணற்றிலே பிடித்துத் தள்ளியிருக்கலாம்' என்று பெற்றோர்களைக் குறை கூறுவது இயல்பாகிறது.

கணவன் மீது வெறுப்புக் கொள்கிற மனைவியினால் அவ் விருவர் வாழ்வுமே பாழாகிறது. வேண்டாத மனைவியோடு காலம் தள்ள நேர்கிற கணவனாலும் இருவர் வாழ்வும் பாழாகிறது. பரஸ்பரம் நாயும் பூனையுமாகச் சேர்கிற ஆண் பெண் வாழ்க்கையைப் பற்றிச் சொல்லவே வேண்டியதில்லை.

தினம் சண்டையும் ஏசலும், அடியும் அழுகையும் தான். வசதியிருந்தால் பெண் அம்மா வீட்டுக்கு ஓடு

கிறாள். அதே போல் வசதியும் ஆசையும் இருந்தால், கணவன் வேண்டாத மனைவியைத் தள்ளி வைத்து விட்டு வேறு கல்யாணம் செய்து கொள்கிறான்.

ஆகவே, என்றும் ஆணுக்கு தாராளமான உரிமை இருந்து வந்திருக்கிறது. பெண் பாடு தான் கஷ்டம். அதனால், சட்ட பூர்வமான விவாக ரத்து உரிமை பெண்ணுக்கு வரப்பிரசாதமாகத் தோன்றலாம். முக்கிய மாக, துணிவும் நாகரிக மோகமும் கொண்ட பெண் களுக்கு.

தாம்பத்ய வாழ்வில் ஏற்படும் மனப் புழுக்கத்துக்கு மாற்று விவாக ரத்து தானா? பழக்க வேகத்தில் சிறு தவறுகள் கூடப் பெரிய குற்றங்களாகத் தோன்றும் போது, பிரிந்துவிட வேணும் என்ற எண்ணம் தோன்றும். 'இந்த வீட்டிலே நான் ஒரு அடிமை. அவர் இஷ்டம் போல் இயங்க வேண்டிய மிஷின். எனக்கு உரிமை எங்கே யிருக்கு? நான் ஒரு மனுஷின்னு மதித்தால் தானே' என்று புழுங்க நேர்கிறவர்கள் நிரந்தரமாகப் பிரிந்து விட்டால் கூட நல்லது என்று அந்த நேரத்தில் நினைப்பது இயல்பு. 'அவள் பீடை. பெருந் தொல்லை. வெறும் கருத்தறுப்பு' என்று கருதும கணவன் சனியன் தொலைந்தால் போதும் என எண்ணுவதும் இயல்பே.

அவ் வேளைகளில், உணர்வின் மூடுபனியில் மூழ்கி நன்றாகச் சிந்திக்க முடியாமல் திணறும் சமயங்களில், போட்டி யிட்டு சண்டை போட்டு, கசப்பு வளர்த்து பிணங்கிப் பிரிவது நவயுக உரிமையாக இருக்கலாம். ஆனால், அது வாழ்வுப் பாதையின் போக்கை சரிக் கட்டுவதாகாது.

'பழகிப் பழகி நான் புளித்து விட்டேன். பாலானு லும் அதிகமாகப் பழகி விட்டால்....' என்று சொல்கிறாள் மனைவி.

'அப்படி நினைத்தது என் தவறு. நான் உண்மையை மறந்தேன். இல்லை, உணரவே இல்லை. மல்லிகை வாடாமலே இருக்குமா? வாடாமல் இருந்தால் அதற்குச் சிறப்பு ஏது? வாடாமல்லிகையில் வர்ணக் கவர்ச்சி இருந்தாலும் மணம் கிடையாது....நீ மல்லிகை. உன் அழகு குறைந்தாலும் மணம் குறையவில்லை. உன் அன்பின் தன்மையை இதுவரை நான் சரியாக உணரவில்லை. அசட்டை செய்து வந்தேன். நீ அதை மறந்து விட வேண்டும் என்று கோருகிறேன்.'

'மறக்காமல் என்ன, சண்டையா பிடிக்கப் போகிறேன். நீங்கள் தான் பழகிய பால் என்று.... .... ....

'பாலைக் குறை கூறுவது தப்பு. குறை யிருப்பதாக நினைப்பது மனதின் கோளாறு. அதைச் சரியாக்கி விட்டால் பால் தினமும் ருசிக்கத் தான் செய்யும். மேலும் மனநிறைவு என்ற சர்க்கரை சேர்த்தால் இனித்து விட்டுப் போகிறது' என்கிறான் யோசித்துப் பார்த்த கணவன்.

இது தான் 'பழகிய பால்' என்ற கதையின் தத்துவம். எண்ணிப் பார்த்தால், வாழ்க்கைக்கு ஏற்ற உண்மை என்று புரியும்.

பிரிந்து போய் வாழ்வைப் பாழடித்துக்கொள்வது சுலபம். சேர்ந்து வாழ்ந்து, குறை தவிர்த்து, குடும்ப வாழ்விலே இன்பம் காண முயல்வதே உயர்ந்த மனிதப் பண்பு.

பிரிந்து போக வழி காட்டுவோர் எண்ணிலர். சேர்ந்து வாழத் துணை புரிவோர் குறைவு.

மேல் நாடுகளில் இன்று 'விவாக ரத்து செய்ய உதவுகிற கோர்ட்டுகளும் வக்கீல்களும் அதிகரித்திருப்பது தேவையற்ற போக்கு. விவாக ரத்துக்கு உதவுகிற வக்கீல்களை விட மனோதத்துவ ஆராய்ச்சி மூலம் மனித மனக்

குறை கண்டு கோளாறை நீக்கத் துணை புரியும் நிபுணர்கள் அதிகம் தேவை நாட்டுக்கு நல்லது செய்ய. துறை தோறும் தேவையான திருத்தம் வகுத்து வழிகாட்டு வதற்குத் தகுந்த உளப் பரிசோதனைச் சிந்தனையாளர்கள் எங்கும் வேண்டும்' எனும் விழிப்பு ஏற்பட்டிருக்கிறது.

ஏன்? விவாக ரத்துக்களைப் போற்றி வளர்க்கிற அமெரிக்காவில் கூட விவாக ரத்தைக் கண்டித்துக் கதைகள், கட்டுரைகள் எழுதுவது அதிகரிக்கக் காரணம் என்ன?

நாகரிகத் தீவிரம், பெண்ணுரிமை மோகம் முதலிய வற்றின் பெயரால் வளர்ந்து வரும் விவாக ரத்து உண்மை யில் கௌரவமான விபசாரம் எனும் நிலைமையை எட்டி விட்டது அங்கே.

இன்றைக்குக் கல்யாணம்....நாளைக்கு விவாக ரத்து.... நாளை மறுநாள் வேறொரு கல்யாணம்....அடுத்த நாள் ரத்து....உடனேயே விவாகம் என்ற தலைபோகிற வேகத் திலே விவாகத்தையும் ரத்தையும் நடத்தித் தீர்ப்பது அமெரிக்கத்தனம்!

புருஷன் தூங்கும்போது அதிகமாகக் குறட்டை விடுகிறான்—அதனால் வேண்டும் விவாக ரத்து. அவன் அதிகம் சினிமாப் பார்க்கிறான்....இல்லை, ஊர் சுற்று கிறானா?....சரி, பண்ணு விவாக ரத்து!....அவன் நல்ல டிரஸ் செய்ய வில்லையா? .... போ, விவாக ரத்து!.... தான் கேட்டதை வாங்கித் தரவில்லை. ஆகவே, ரத்து!

இப்படித் தும்மினாலும் தூங்கினாலும், குறட்டை விட்டாலும் கோளாறு சொன்னாலும், கோபமாகப் பேசி னாலும் பேசாவிட்டாலும் — எதற்கெடுத்தாலும் விவாக ரத்து தான். இது அமெரிக்கத்தனத்தில் அதிதீவிரமான ஹாலிவுட் மோஸ்தர்.

இந்தப் போக்கினால், ஆணுக்கு அதிகச் செலவு, மனமுறிவு, பெண்ணுக்குப் புதிய தொல்லைகள், பொறுப்பற்ற தனத்தினால் விளையும் தீங்குகள், குழந்தைகளின் வளர்ப்பில் மோசமான நிலைமை, குழந்தை மனப்பண்பு பாதகமடைதல் முதலிய எவ்வளவோ கஷ்டநஷ்டங்கள் உண்டாகின்றன. இவற்றை நாகரிக சமுதாயம் உணர்ந்து வருகிறது.

அமெரிக்காவில் அதிகமாக விவாக ரத்துகள் நடப்பதற்குக் காரணம், அவர்களது பொறுப்பற்றதனமும் புதுமை மோகமும் மாத்திரம் அல்ல. சட்டமும் துணை புரிகிறது என்றே சொல்ல வேண்டும்.

அங்கு, விவாக ரத்து கோருவோர், கணவனாக இருந்தால் மனைவி தனக்குத் துரோகம் செய்துவிட்டாள் என்று சாட்சியத்துடன் மனுச் செய்து கொண்டால் போதும். அத்துடன், அவளுக்கு ஒரு தொகையைக் கொடுத்து விடவும் தயாராக இருக்கவேண்டும். மனைவி விவாக ரத்து வேண்டினால், அவளும் அவ்விதமே செய்ய வேண்டும்.

விவாக ரத்து பெற விரும்புகிறவர்களுக்கு உதவி புரிவதற்காகவே கூலிக்கு காதல் நடிப்பு நடிக்கக் காத்திருக்கும் ஆண் பெண்கள் அதிகப் பேர் இருக்கிறார்களாம் அமெரிக்காவிலே. முன் ஏற்பாட்டின்படி, 'புரபஷனல்' காதலி கணவனோடு அவனது படுக்கை யறையில் காணப்படுவாள். அவ்விருவரும் அங்கிருப்பதை நண்பனோடு, அல்லது சிநேகிதியோடு, வரும் மனைவி பார்த்து விடுவாள். உடனே விவாக ரத்து மனுச் செய்தல் தான்....மனைவி 'புரபஷனல்' காதலனோடு படுக்கையறையில் இருப்பதைக் காண்கிற கணவன் விவாக ரத்து கோரி மனுப் போட வேண்டியது தானே! இந்த ரீதியில் நாடகமாகி விட்டது விவாக ரத்து விவகாரங்கள்.

வரவர விவாக ரத்து ஆண்களின் வாழ்வையே அதிகம் பாதிக்கிறது என்று ஒரு அமெரிக்கக் கணக்கு கூறுகிறது. ஆண்டு தோறும் கணவன் மாஜி மனைவிக்கு அளிக்க வேண்டிய ஜீவனாம்சம் அவனது பணப்பையைக் கரைக்கும் பெருந் தொகையாகவே தோன்றுகிறது அவனுக்கு. அத்துடன் அது அநாவசியமான செலவும் கூட! விவாக ரத்து செய்யப்படுகிற மனைவி சும்மாவா இருக்கிறாள்? அவள் மறு விவாகம் செய்வதை ஒத்தி போட்டு வந்தாலும்—அல்லது மறுவிவாகமே வேண்டா மென்று துணிந்து விட்டாலும்—புனித வாழ்வு வாழ்வ தில்லையே. சமூகப் பட்டுப் பூச்சியாக, நாகரிக உலக வண்ணாத்திப் பூச்சியாக, இரவு தோறும் இஷ்டப்பட்ட ஆண்களோடு கும்மாளியிட்டுத் திரிகிறாள் அந்தத் தளுக்குக்காரி. அவள் உரிமை அது. அதிலே குறுக்கிட சட்டம் உரிமையளிக்க வில்லை. ஆனால் மாஜிக் கணவன் அவள் போக்கை ஆட்சேபித்து, குறிப்பிட்ட பணத்தைக் கொடுக்காம லிருந்தால், அவனை கோர்ட்டுக்கு இழுக்க அவளுக்கு உதவி புரிகிறது சட்டம்.

குழந்தைகள் தாயுடனேயே வாழவேண்டும் என்று விதிக்கப்படுவதால், தந்தைக்கு அதிகக் கவலையும் மனக் கஷ்டமும் ஏற்படுகிறது. பொருளாதாரக் கவலையோடு மனத்துயரமும் மாஜிக்கணவர்களை பரிதாபத்துக் குரியவர் களாக்கி விடுகிறது.

விவாக ரத்து கோரி வழக்குத் தொடரும்படி வக்கீலை அணுகும்போது, வக்கீல் பண ஆசை கொண்டு இருவர் வாழ்வையும் தண்டிக்க முயலாமல், அனுதாபத் தோடு குறைகளை விசாரித்து பொறுத்திருந்து பார்க்கும் படி யோசனை கூறவேண்டும். ஏதோ காரணத்தால் கொதித்தெழும் உணர்ச்சிப் புயல் ஒடுங்க ஒடுங்க பரஸ் பரப் பிரிவும் பிரியமும் உண்டாகி, விவாக ரத்துக்கு அவசியம் இல்லாமல் போய்விடும் என்று சில அறிஞர்கள் அபிப்பிராயப்படுகிறார்கள்.

விவாக ரத்து உரிமை இருக்க வேண்டியது தான். ஆனால், விவாக ரத்து பெறுவது சுலப சாத்தியமான காரியம் என்ற நிலைமையில் இருக்கக் கூடாது. விவாக ரத்து பெறுவதும் ஒரு தண்டனை போல எனும் எண்ணம் நிலவ வேண்டும். அவ்வாறுனல், விவாக ரத்து கோரு கிறவர்கள் வழக்குத் தொடருமுன் நன்ருக யோசிப் பார்கள். ஒரு தரத்துக்கு இரண்டு தடவைகளாக ஆலோசிக்கும் போது காலதாமதம் ஏறபடும். காலம் பிணக்கைச் சரிக்கட்டி விடும். எண்ணிப் பார்க்கையில் தவறுகள் புலனுகி, பரஸ்பரம் மறந்து மன்னிக்கவும் தயாராகிவிடுவர், இப்படி ஒரு கட்சி உண்டு.

இத்தகைய உரிமைச் சட்டம் தான் ரஷ்யாவில் அமுலில் இருக்கிறது என்றொரு புத்தகத்தில் படித்தேன். விவாக ரத்து கோரி குறிப்பிட்ட கோர்ட்டுக்குச் செல் வதற்கே தயங்குவார்களாம் தம்பதிகள். காரணம், அங்கு அவர்கள் செலுத்த வேண்டிய தொகை அவர்களை அச்சுறுத்தும் அளவில் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அப் படியே துணிந்து ரத்து கோரி பதிவு செய்தாலும், உடனேயே ரத்து உரிமை அளிக்கப்படுவதில்லையாம். விசாரித்து, விவாக ரத்து செய்துகொள்ள வேண்டியது அவசியம் என்று நினைக்கிருர்களா? ரத்து செய்யாமல் சமாதானமாக வாழ முடியாதா அவர்களால் என்றெல் லாம் பரிவுடன் வினவி, பின் இப் பிரச்னை பற்றி யோசிக்க ஒரு மாதம்—அல்லது ஏதோ ஒரு குறிப்பிட்ட காலம்— தவணை கொடுத்து வீட்டுக்கு அனுப்பி வைப்பார்களாம். ரத்து செய்யாமல் தீராது என்று அவர்கள் திரும்பி வந்தால், நிர்ணயிக்கப்பட்டுள்ள தொகையைச் செலுத்தி விட்டு, உரிமைச் சீட்டு பெற்றுக் கொள்ளலாம்.

விவாக ரத்து உரிமையினால் நன்மையை விடத் தீமையே அதிகம் உண்டாகிறது. அதனால் சமுதாய நலம் பாதிக்கப்படுகிறது. ஆகவே, கூடியவரை விவாக ரத்துக்களைத் தவிர்ப்பதே சிறந்தது என்கிற நோக்கம் தான் இந்த அமைப்புக்குக் காரணம்.

* * *

விவாக முறிவுகளைத் தடுப்பதற்கு, முதலில் பொருந்தா மணங்கள் நிகழாமல் தடுக்கவேண்டும். திருமணம் இன்பம் தரும் கல்யாணங்களாக விளங்க வேண்டும். கல்யாணம் பற்றிய பலவித எண்ணங்களை யும் விரிவாக வேறு புத்தகங்களில் குறிப்பிட்டிருக் கிறேன். *

கல்யாணமான பிறகும் கூட கணவன் மனைவியை தன் காம இச்சைக்கு உரிய மனித மிஷினாகவோ, குளிர் காய உதவுகிற 'கணப்பு' ஆகவோ, தனக்குப் பணிவிடை செய்ய வந்து சேர்ந்த அடிமையாகவோ கருதாமல், அவளும் வாழ்க்கையை அனுபவிக்க விரும்புகிற பெண் என்று மதித்து அன்புடன் பழக வேண்டும். மனைவி ஒரு புதுமை எனும் நிலை நீடிக்கும் ஆரம்ப மாதங்களில்

---

* 1. கல்யாணம்—இன்பம் கொடுப்பதா? இன்பத்தைக் கெடுப்பதா?

(வல்லிக்கண்ணன்) விலை அணா—3.

2. நல்ல மனைவியை அடைவது எப்படி?

வல்லிக்கண்ணன் எழுதியது. விலை அணா—3.

மட்டுமல்ல. எக்காலத்தும். மனைவியும் கணவனை தனக்கு வேண்டியதை யெல்லாம் சம்பாதித்துப் போட வந்தவன்; தனது சுகம் கெடாமல் பாதுகாக்க வேண்டியவன் என்று ராங்கியோடு திரியாமல் அவனிடம் அன்பும் மதிப்பும் காட்டவேண்டும். பரஸ்பரம் குறைகளைப் பெரிது படுத்தாமல், விட்டுக் கொடுக்கும் தாராள மனதுடன் பழகவேண்டும். தம்பதிகள் நினைவில் நிறுத்த வேண்டிய முக்கிய விஷயங்கள் இன்னும் பல உள. *

கல்யாணமானவர்களிடையே பிணக்கும் முறிவும் ஏற்படுவதற்கு இன்றைய சமுதாயத்தில் வாழ்கிற பொருளாதார பேதமும் முக்கிய காரணம். பெரிய இடத்துப் பெண் கணவனை அலட்சியமாகக் கருதுகிறாள். தன் பிறந்தகத்தில் பணம் இருப்பதால், கணவன் தன் தயவை நம்பி வாழ வேண்டியவன் என்ற அகந்தையோடு பேசுவதிலும் காரியங்கள் புரிவதிலும் ஈடுபடுகிறாள். சிறு மனபேதம் ஏற்படினும் பெற்றோர் வீட்டுக்கு ஓடி விடுகிறாள். அவள் சொல்லைக் கேட்டுக் கொண்டு, 'இவள் நம் வீட்டிலேயே இருந்து விட்டுப் போகட்டும். இவள் பெண்ணாகப் பிறக்காமல் மகனாக பிறந்தால் நம் வீட்டோடு வைத்திருப்போ மல்லவா?' என்று அகம்பாவத்தோடு கணவனையும் அவனைச் சேர்ந்தவர்களையும் கேவலமாகப் பேசுவது சர்வ சாதாரணமாக இருக்கிறது.

அதே போல், கணவன் பணக்காரன் மகனாக பிறந்து மனைவி சாதாரண குடும்பத்தில் வந்தவளாக

---

* படித்துப் பாருங்கள்!

1. கல்யாணத்துக்குப் பிறகு காதல் புரியலாமா?
2. கல்யாணமானவர்கள் கவனிக்க வேண்டியவை.

வல்லிக்கண்ணன் எழுதியது.

ஒவ்வொன்றும் விலை அணா—3.

யிருப்பின், மாமியார் மாமனார்கள் அவளை வேலைக்காரி போலவும், தங்களைவிட அந்தஸ்து குறைந்தவளாகவும், அதனால் தாங்கள் கூறுவதை யெல்லாம் கேட்டுக்கொண்டு சொன்ன அலுவல்களை யெல்லாம் செய்ய வேண்டியவள் என்றும் கருதுகிறார்கள். இச் சூழ்நிலையில் சிக்குகிற பெண்ணுக்கு கணவனைத் தவிர கதி யார்? அவன் தன்னம்பிக்கையும் சுயபலமும் அற்ற அப்பாவியாக இருந்தால் அவள் பாடு 'ஐயோ! பாவம்' தான். இந்நிலையிலும் தாம்பத்ய வாழ்விலே பிணக்கு விளைகிறது.

கல்யாணமானவர்களின் இன்ப வாழ்வுக்கு உறவினர்கள் உதவி செய்வதும் உண்டு. இடையூறு விளைவிப்பவர்களாக விளங்குவதுமுண்டு. மக்களின் மனப்பண்பும் அறிவு நிலையும் மாறி வளராத வரையில், நல் வாழ்வு வாழ விரும்புகிறவர்களுக்குத் தொல்லைகள் இருந்தே தீரும். சமுதாய அமைப்பு முறையில் மாறுதல் பிறவாத வரை, பொருளாதார பேதங்களும் அவை காரணமாகப் பிறக்கிற குறைகளும் இராமல் போகா. வாழ்விலே நல் மணமும் இன்பமும் பயனும் பெற அவாவுகிறவர்கள் பேராசை கொண்டு தனக்கு மீறிய பெரிய இடங்களைப் பிடிக்க அலைந்தால், அதனால் வருகிற தொல்லைகளையும் அனுபவிக்க வேண்டியது தான். வாழ்க்கையில் மனம் பிணங்கா நல்ல தம்பதிகளாக வாழ விரும்புகிறவர்கள் ஒத்த குணமும், ஒத்த நிலைமைகளும் உடையவர்களாக அமைதல் வேண்டும்.

காதல், அன்பின் பெருக்கு என்று கூறி ஜோடி சேர்ந்தால் பரஸ்பரம் மற்றவரின் பொருளாதார உயர்வு தாழ்வுகளை பெரிது படுத்தக் கூடாது. இவற்றை ஆதாரமாக வைத்துக் கொண்டு, கணவன் மனைவியையோ, மனைவி கணவனையோ ஆட்டி வைக்க வேண்டும் என்று ஆசைப்படுவதும் பிணக்கிலும் பேத புத்தியிலும் தான் கொண்டு சேர்க்கும்.

இந்த ரகமான சூழ்நிலைகளாலும் தூண்டுதல்களி னாலும் எழுகிற வேற்றுமைகளுக்காக உடனடியாக விவாக ரத்து செய்யத் துணிவது விபரீத விளையாட்டே யாகும். மனச் சூடு தணியும் வரை ஆறப் போட்டு பிரச்னைக்கு நல்ல முடிவு காண முயல்வதே புத்திசாலித் தனம்.

தாம்பத்ய வாழ்வில் அவ்வப்போது சிறுசிறு சண்டை சச்சரவுகள் எழுவது சகஜம். அவை கல்யாண வாழ்வின் சுவையை அதிகரிக்க உதவுவனவாகவும் அமையும், அதற்காக இவற்றை பூதாகாரமாக்கி, 'கொடி கட்டிக் கொண்டு', கட்சி கட்டி விலகிப் போகிற அள வுக்கு தம்பதிகளும் உறவினர்களும் பிணக்கை வளர்த்து விடுவதும் வாழ்வின் நிகழ்ச்சிகளாக உள்ளன. இவ்வளவு தூரத்துக்கு வளர்த்தாமல் குறை களைய வேண்டியது பெரியவர்களின் கடமை.

குழந்தை பிறக்கவில்லை என்கிற காரணத்துக்காக பெண்ணைக் குறை கூறி விலக்கி வைத்து, மகனுக்கு வேறு பெண் பார்த்துக் கல்யாணம் கட்டி வைப்பதும் இன்றைய சமுதாயத்தில் 'தண்ணீர் பட்ட பாடு'. இக் குறைக்காக ஏதாவது தோஷம் கற்பித்து விவாக ரத்து செய்யத் துணிந்தாலும் துணியலாம் சிலர். அப்படித் தள்ளிவைக்கும் முன் ஜாதகங்களையும் கோயில்களையும் நம்பி பெண் மீது மலடுப பட்டம் கட்டுவதற்கு பதிலாக, கணவனையும் மனைவியையும் வைத்தியப் பரிசோதனைக்கு உள்ளாக்கி உண்மையை உணர முயல்வது நல்லது. பெண் மட்டுமே மலடு என்று கொள்வதற்கில்லை. ஆண் மலடாக இருந்தாலும் இருக்கலாம்.

விவாக ரத்து உரிமை தேவைதான். ஆனால் அதைக் கையாள்வதில் அமெரிக்கத்தனம் பிரதிபலிக்கக் கூடாது. விவாக ரத்து இல்லாமல் தீராது எனும் நெருக்கடி ஏற்படுவதற்கு முன்பே நிலைமையைச் சரிக்கட்டிச்

சமாளிக்க தாங்களாகவும் பெரியவர்கள் துணையுடனும் முயற்சிப்பது நல்லது.

சில சமயங்களில், கணவனும் மனைவியும் தனியாக குடும்பம் நடத்தும் போது இப்படி நிகழ்வது உண்டு. அதற்குக் காரணங்கள் எவ்வளவோ இருக்கலாம். நெருக்கம் அதிகமாவது கூட—'பழகிய பால்' என்கிற தன்மையில்—இருக்கலாம். இதற்கு இருவருக்கும் பொது மேற்பார்வை பார்க்க ஒரு அத்தையோ, அம்மாளோ வீட்டிலே உலவிக் கொண்டிருந்தால் மனப் புழுக்கம் மாறலாம். இதுபோன்ற சமயங்களில் தான் இருவரின் பொதுவான அன்புக்கும் கொஞ்சுதலுக்கும் இலக்காகிற குழந்தை வேண்டும் என்ற தேவை தம்பதிகளிடையே அதிகரிக்கிறது.

*　　*　　*

விவாக ரத்து உரிமையை அவசியம் பிரயோகிக்க வேண்டிய சந்தர்ப்பங்களும் உண்டு.

கணவனோ மனைவியோ தீராத கொடிய வியாதியினால் — தொத்து நோயால் — பீடிக்கப்பட்டிருந்தால், குடும்ப வாழ்விலே இன்பமா உண்டாகும்? இவர்களுக்குப் பிறக்கும் குழந்தைகளும் களங்கமுடையனவாகத் தான் திகழும்.

குஷ்டரோகமோ வேறு பயங்கர வியாதியோ இருப்பதை மறைத்து, பணம்—அந்தஸ்து—படாடோபம் முதலிய வெளிச்சங்களால் மயக்கி நல்ல பெண்ணைக் கல்யாணம் செய்து கொள்பவர்களும் இருக்கிறார்கள். அத்தகைய கணவனுடன் பெண் என்ன சுகத்தை அடைந்துவிட முடியும்?

பணத்தை பக்க பலமாகக் கொண்டு அலிக்குக் கூட அழகியைக் கட்டி வைத்து விடுகிறார்கள் இன்றைய சமுதாயத்திலே.

நல்ல குணமும் நேர்மையும் உள்ள கணவன் கிடைப்பான் என்று கனவு கண்டு வாழும் பூங்கொடிக்கு வெறித்தனமும், வக்கிர குணங்களும் நிரம்பிய வீணன் வந்து வாய்ப்படுதோடு, அவளை தினமும் நரக வேதனைக்கு உள்ளாக்கினால், 'பெண் நாம் ஏன் பெண்ணாகப் பிறந்து புண்ணாக உலைய வேண்டும்' என்று வருந்துவதில் தவறு உண்டா?

இந்த ரகமான விவாகங்கள் நிகழ்ந்துவிட்ட போது, மேலும் மேலும் தொல்லைகளை அனுபவித்து நரக வாழ்வாக மாற்றுவதை தவிர்ப்பதற்கு விவாக ரத்து உரிமை பயன்படும். தகுந்த வைத்தியப் பரிசோதனையுடன் விவாக ரத்து அவசியமா இல்லையா என்று தீர்மானிக்க முடியும்.

விவாக ரத்து உரிமை ஒரு ஆயுதம். சக்தியுள்ள ஆயுதம்.

ஆயுதம் ஆப்பரேஷன் செய்யவும் உபயோகப்படும். கொலை செய்வதிலும் பயன்படுகிறது. அது உபயோகிக்கிறவர்களின் தன்மையைப் பொறுத்தது.

குணக்கேடுகளினாலும், பொருத்த மின்மையாலும் எழுகிற கோளாறுகளை நிவர்த்தி செய்வதற்கு உபயோகிக்கக் கூடிய விவாக ரத்து உரிமையை தற்கொலைத் திட்டமாகவும், சமுதாயத்துக்குக் கேடு விளைக்கும் முறையிலும் உபயோகப்படுத்தலாம்.

"அசோகன்" எழுதியவை

இரண்டு கதைகள் 0—8—0

கற்புக்கு ஆபத்து? 0—3—0

விற்பனைக் கழிவு 25% அனுப்பும் செலவு இனும்

பிரசுரம்:

எம். சூரி
14, ஏ-குப்பையர் தெரு,
சென்னை. 1.